பதிவு எண் M. 4729

# தமிழ் ஹரிஜன்

தமிழ்ப்பண்ணை வெளியீடு: ஆசிரியர்கள் பொ. திருகூட சுந்தரம், நாமக்கல் கவிஞர்

மகாத்மா காந்தியடிகளின் வாரப் பத்திரிகை

24 ] சென்னை—ஞாயிறு, செப்டம்பர் 22, *1946*. [ விலை அணா 2

## அது கோழைத்தன மல்லவா?

கேள்வி:—அஹிம்சையென்பது கோழைத்தனம் அல்ல என்றும் அனியாயத்தை எதிர்த்துப் போராடும் முறைகளில் ஒன்று என்றும் தாங்கள் கூறுகிறீர்கள். சாத்வீக எதிர்ப்புச் செய்கிறவர்கள் நிரபராதிகள். ஆதலால் அவர்களைக் கைதிசெய்து சிறையிலிடுவது தவறு என்பதைத் தாங்கள் ஒப்புக்கொள்ளுகிறீர்கள். ஆயினும் தாங்கள் நீங்களாகவே கைதிசெய்யப் படவும் சிறையிலிடப்படவும் சந்தோஷமாகத் தயாராகிறீர்கள். இது முரண்பட்டதாகவும் கோழைத்தனமானதாகவும் இருக்கிறது அல்லவா?

பதில்:—அஹிம்சை எப்படி வேலை செய்கிறது என்பது தங்களுக்குத் தெரியாதுபோல் இருக்கிறது. எந்தச் சட்டம் நியாயமில்லையோ அந்தச் சட்டமும் பலாத்கார இனத்தில் சேர்ந்ததுதான். அதை மீறுவதற்காக கைதிசெய்வது அதைவிட அதிகமான பலாத்காரமாகும். பலாத்காரத்தை பலாத்காரத்தால் எதிர்க்காமல் அஹிம்சையால்தான் எதிர்க்கவேண்டும் என்பதே அஹிம்ஸைத் தத்துவமாகும். எந்தச் சட்டத்தையேனும் மீறினால் தண்டனை உண்டு. எந்தச் சட்டமும் நான் அநியாயமானது என்று சொல்வதைக் கொண்டு அநியாயமாகிவிடாது. ஆயினும் எனக்கு அது அநியாயமாகத் தோன்றுமானால் நான் அதை அஹிம்சை மூலம் எதிர்க்க வேண்டியவனாவேன். சர்க்காரோ அந்தச் சட்டத்தை அமல் நடத்த வேண்டியவர்கள் ஆவார்கள். நான் பலாத்காரமின்றிச் சட்டத்தை மீறவும், சர்க்கார் கைதி செய்து சிறையிலிட்டால் அதை பலாத்காரமின்றி ஏற்றுக் கொள்ளவும் வேண்டும். அத்தகைய காரியத்தை வேண்டிய அளவு வீரம் பொருந்திய செயலாகக் கூறுவேன். என்னைப் போன்றவர்களுக்குச் சிறைவாசம் துன்பம் தருவதில்லை என்பது இந்தப் பிரச்சினைக்கு சம்பந்தம் உடையதில்லை. ஆகவே கைதி செய்யப்படுவதை எதிர்க்காதிருப்பது கோழைத்தன மன்று, அஹிம்சையின் இன்றியமையாத அம்சங்களில் ஒன்றேயாகும். கைதி செய்யப்படுவதை எதிர்ப்பதென்பது முன் பின் யோசியாமல் செய்யும் பலாத்காரமேயாகும். அதைக் கோழைத்தனத்தின் காரணமாக வீண் பெருமை காட்டும் செயலாகவே கருத வேண்டும்.

புது டெல்லி —16-9-46— மோ. கா. காந்தி.

## ஒன்று சேர்ந்து பிரார்த்திப்பது

கேள்வி:—ஜனங்கள் ஒன்று சேர்ந்து பிரார்த்தனை செய்வதில் தாங்கள் நம்பிக்கையுடையவர்களா யிருக்கிறீர்கள். அப்படியானால் கிறிஸ்தவர்கள் தங்கள் கோயிலில் ஒன்று கூடி பிரார்த்தனை செய்கிறார்களே அது உண்மையான பிரார்த்தனைதானா? அதை நான் மனிதனை இழிவாக்கும் காரியமாகவும் அதனால் அபாயகரமான காரியமாகவும் கருதுகின்றேன். "பிரார்த்தனை செய்யும்பொழுது உள்ளொன்று வைத்துப் புறமொன்று செய்கிறவர்கள் போலச் செய்யாமல் உள்ளே உள்ள அறைக்குச் சென்று கதவைத் தாளிட்டுக்கொண்டு அந்தரங்கமாக வுள்ள பரமபிதாவினிடம் பிரார்த்தனை செய்து கொள்" என்று ஏசு கூறுகிறார்.

ஒரு கூட்டத்திலுள்ள ஜனங்களில் பெரும்பாலோர் பிரார்த்தனை நடக்கும்பொழுது அதைக் கவனியாமல் இருக்கிறார்கள். அதில் கருத்தைச் செலுத்தக்கூடிய சக்தியில்லாதவர்களாயும் இருக்கிறார்கள். அதனால் அத்தகைய பிரார்த்தனை கடவுளை ஏமாற்றுவதாகவே ஆகிவிடுகிறது. யோகிகளுக்கு இது தெரியும். ஆதலால் ஜனங்களுக்குத் தங்கள் மனத்தைத் தாங்களே பரிசோதனை செய்துகொள்ளக் கற்றுக்கொடுக்க வேண்டாமா? அப்படிச் செய்யும் ஆத்ம சோதனை தானே உண்மையான பிரார்த்தனை?

பதில்:—நான் ஜனங்களைக் கூட்டி வைத்து நடத்தும் பிரார்த்தனையை உண்மையான பிரார்த்தனை என்றே கருதுகிறேன். பிரார்த்தனை நடத்துகிறவர் பிரார்த்தனையில் நம்பிக்கை யுடையவர். ஏமாற்றுகிறவர் அல்லர். அவர் ஏமாற்றுகிறவரா யிருந்தால் அவர் நடத்தும் பிரார்த்தனை கறைப்பட்டதேயாகும். சாதாரணமாக ஜனங்கள் கோவிலில் போய் பிரார்த்தனை செய்வது, அதன்காரணமாகத் தங்களுக்கு இகலோகத்தில் ஏதேனும் லாபம் கிடைக்கும் என்ற நோக்கத்துடன்தான். ஆனால் நான் நடத்தும் பிரார்த்தனைக் கூட்டத்திற்கு வருகிறவர்கள் அத்தகைய நோக்கத்துடன் வருவதில்லை. அவர்களில் பெரும்பாலோர்க்கு கூட்டத்தை நடத்துகிறவருடன் எவ்விதத் தொடர்பும் கிடையாது. அவர்கள் வேடிக்கை பார்க்க வருவதில்லை.

ஒன்று சேர்ந்து பிரார்த்தனை செய்வதால் எப்படியோ தங்களுக்குப் புண்ணியம் கிடைக்குமென்று நம்பியே என்னுடைய பிரார்த்தனைக் கூட்டங்களுக்கு வருகிறார்கள். அவர்களில் சிலரோ, பலரோ அதைக் கவனியாமல்இருக்கிறார்கள் என்பதும் அதில் கருத்தைச் செலுத்த முடியாமலிருக்கிறார்கள் என்பதும் முற்றிலும் உண்மையேயாகும். அவர்களுக்கு இந்தமாதிரி பிரார்த்தனை செய்யும் பழக்கம் இன்னும் உண்டாகவில்லை என்பதைத்தான் அது காட்டுகிறது. கவனமின்மையைக் கொண்டும் கருத்தைச் செலுத்த முடியாமையைக் கொண்டும் கடவுளை ஏமாற்றுவதாகத் தீர்மானித்து விடக்கூடாது. கவனிக்காதிருந்தும் கவனிப்பதாகப் பாசாங்கு செய்தால்தான் கடவுளை ஏமாற்றுவதாகக் கூறலாம். கருத்தைச் செலுத்த முடியவில்லையே, அதற்கு என்ன செய்வது என்றே பலர் என்னிடம் அடிக்கடி கேட்கிறார்கள். ஏசுவின் மொழிகள் இந்த விஷயத்துக்குச் சம்பந்தமுடையதல்ல. ஏசு தனியொருவர் செய்யும் பிரார்த்தனையைப் பற்றியும் அதில் ஏற்படக் கூடிய வஞ்சகத்தைப் பற்றியுமே அந்த மொழிகளில் கூறியிருக்கிறார். பலர் ஒன்றுகூடி பிரார்த்தனை செய்வதற்கு

விரோதமாக அவர் கூறியதாக எண்ணுவதற்கு அந்த மொழிகளில் எவ்வித ஆதாரமும் காணவில்லை.

தனித்துப் பிரார்த்தனை செய்யாமல் ஒன்று கூடி மட்டும் பிரார்த்தனை செய்வதால் அதிகப் பலன் வராது என்று அடிக்கடி நான் எழுதியிருக்கிறேன். தனித்துப் பிரார்த்தனை செய்வது, சேர்ந்து பிரார்த்தனை செய்வதற்கு அடிப்படையாகும். சேர்ந்து பிரார்த்தனை செய்வது பயனுள்ளவையாயிருக்குமானால் தனித்துப் பிரார்த்தனை செய்யும்படியும் தூண்டவே செய்யும். இதன் தாத்பரியம் யாதெனில், ஹிருதய பூர்வமாகப் பிரார்த்தனை செய்யும் நிலைமையை அடைந்தவர்கள் தனித்துப் பிரார்த்தனை செய்தாலும், சேர்ந்து பிரார்த்தனைசெய்தாலும் உண்மையாகப் பிரார்த்தனை செய்வார்கள். கேள்வி கேட்டிருப்பவர் யோகியைப் பற்றிக் கூறுகிறார். யோகி என்ன செய்வார் என்ன செய்ய மாட்டார் என்பது எனக்குத் தெரியாது. ஆனால் இதயத்தை எல்லையற்றப் பரம் பொருளுடன் இணைத்துக் கொள்ளும் ஜனங்கள் எப்பொழுதும் ஆத்ம சோதனை செய்து கொள்வதில் ஈடுபடுகிறார்கள் என்பதை நான் அறிவேன். உண்மையான ‘பிரார்த்தனையின் லக்ஷியம் ஆத்ம சோதனைதான். அந்த லக்ஷியமில்லாத பிரார்த்தனை உண்மையானதாகாது.

புது டில்லி, — 14-9-46 — மோ. க. காந்தி.

## நிருபர்களுக்கு ஒரு வேண்டுகோள்

சில நல்ல ஜனங்கள் இடைக்கால சர்க்காரில் தங்களுக்குப் பதவிவாங்கித் தரும்படி வேண்டிக்கொண்டும், வேறுசிலர் பல இடங்களில் நடக்கும்வேலைநிறுத்தங்களைப் பற்றி யோசனை கேட்டும், மற்றும் சிலர் உண்ணாவிரதத்தைப் பற்றி விவரங்கள் கேட்டும் எனக்குத் தந்திகளனுப்பித் தங்கள் பணத்தை வீணாக்குகிறார்கள். அவர்கள் அனாவசியமாகச்சிரமப் படவும் பணத்தை வீணாக்கவும் செய்கிறார்கள். அது மட்டுமன்று. அளவுக்கு மிஞ்சி வேலை செய்யும் என்னுடைய சகஊழியர்கள் மீது அதிகமான வேலையைச் சுமத்துகிறார்கள். என்னிடமிருந்து தாங்கள் விரும்பும் உதவியைப் பெறுகிறார்களா அதுவுமில்லை.

இன்னாரை மந்திரியாக நியமியுங்கள் என்று தேசிய மந்திரி சபையாரிடம் நான் என்னுடைய செல்வாக்கை உபயோகிக்க விரும்பவில்லை. நானோ பிறரோ அப்படிச் செய்வது தவறென்றே எண்ணுகிறேன். தேசிய மந்திரி சபையார் உண்மையான விதத்திலும் பலன்தரக் கூடியவிதத்திலும் தேச சேவை செய்ய வேண்டுமானால் மந்திரிகள் நியமிக்கும் விஷயத்தில் அவர்களை அவர்கள்இஷ்டம்போல் செய்ய விட்டுவிட வேண்டும். வேலை நிறுத்தங்கள் சம்பந்தமாகவும் உண்ணாவிரதம் சம்பந்தமாகவும் என்னுடைய கருத்துக்கள் எல்லோருக்கும் தெரியும். தேவையான பொழுது அவைகள் போதுமான அளவு வழி காட்டும். இருகக்ஷியும் தெரியாமலும் எல்லா விபரங்களும் தெரியாமலும் அபிப்பிராயம் கூற முடியாது. கூறினால் அது தவறாகும். ஒவ்வொரு உண்ணா விரதத்தையும் வேலைநிறுத்தத்தையும் ஆராய்ந்து முடிவுகூற எனக்கு நேரமில்லை. எல்லையற்ற சக்தியும் எனக்கு இல்லை. என்னிடமுள்ள சக்தி முழுவதையும் நான் உபயோகிக்கிறேன் என்பதையும் இதற்கு மேல் அதிகமாகச் செய்ய இடமில்லை என்பதையும் நான் நிருபர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

புது டில்லி — 15-9-46 — மோ. க. காந்தி.

## காலியான நடவடிக்கைப் புத்தகங்கள்

ஒரு மாணவர் எழுதுகிறார் :—

“அரசியல் ஊழியராக நடிப்பதென்பது ஒரு நாகரீகமாக ஆகி இருக்கிறது. இப்பொழுதுள்ள அரசியலெல்லாம் தேர்தல் இயக்கத்தில் கலந்து கொண்டு பிரசங்கங்கள் செய்து வருவதாகவே இருந்து வருகிறது. காங்கிரஸ் கமிட்டிகளின் நடவடிக்கைப் புத்தகங்களில் வருஷாந்திரக் கூட்டத்தின் நடவடிக்கைகள் காணப்படுவதைத் தவிர வேறெதுவும் காணப் படுவதில்லை என்பதை அறியத் தாங்கள் வருத்தப்படுவீர்கள். எல்லாம் பதவி மோக அரசியலாகவேயிருந்து வருகிறது. மாணவர்களும்கூட இந்தச் சூழலில் அகப்பட்டுக்கொள்கிறார்கள். அரசியல் ஊழியர் என்பவர் எப்படிப்பட்டவராயிருக்க வேண்டும்? தங்கள் கருத்து யாது?”

பதில் :—நிர்மாண வேலையின் அவசியத்தைப் பற்றி நான் இடைவிடாமல் கூறிவருகிறேன். அதற்காக எல்லா ஊழியர்களுக்கும் வழி காட்டியாயிருக்கும் பொருட்டு நிர்மாண வேலைத் திட்ட மொன்று வகுத்திருக்கிறேன். நிர்மாணத் திட்டத்தை அறிவோடும், உற்சாகத்தோடும் நடத்திவைத்தால் அதனால் கிடைக்கும் நன்மை வெறும் அரசியல் சுயராஜ்யத்தைவிடப் பன்மடங்கு அதிகமானதாயிருக்கும். நம்முடைய ஊழியர்கள் தங்கள் சேவையின் மூலம் ஜனங்களுடைய ஹிருதயத்தில் காங்கிரஸை ஸ்தாபித்து விடுவார்களேயானால் பிரசங்கங்களுக்கும் தேர்தல் பிரசாரங்களுக்கும் அவசியமேற்படாது. அப்பொழுது பதவிமோகம் மறைந்து போகும். உண்மையான சேவையே நடைபெறும். காங்கிரஸ் கமிட்டிகள் வாரத்துக்கொரு முறையோ பக்ஷத்திற்கு ஒரு முறையே கூடிக், தாங்கள் செய்த நிர்மாணத் திட்ட வேலையைப் பற்றி தங்கள் நடவடிக்கைப் புத்தகங்களில் எழுதி நிறைத்து வைப்பார்கள்.

புது டில்லி, – 14-9-46 – மோ. க. காந்தி.

## அத்தாட்சி பெறாத கதரும் மில் துணியும்

குஜராத்தி நண்பர் ஒருவர் எழுதுகிறார் :—

“தேசிய ஸ்தாபனங்கள், தங்களிடம் வேலை பார்ப்பவர்கள் கதரே உடுத்த வேண்டும் என்று வற்புறுத்துவதோடு நிற்காமல் தங்கள் கணக்குப் புத்தகங்கள் கூட கதரைக் கொண்டு அட்டை போட வேண்டுமென்றும் வற்புறுத்துகின்றன. ஆனால் நூல் கொடுத்துத் தான் அத்தாக்ஷி பெற்ற கதரை வாங்க முடியும். அதனால் அந்த ஸ்தாபனங்கள் அத்தாக்ஷி பெறாத கதரையே உபயோகிக்கின்றன. இது சரியா? அத்தாக்ஷி பெறாத கதரை உபயோகியாமல் மில் துணி உபயோகிக்கலாமல்லவா? கதரை உபயோகிக்கும்படி வற்புறுத்தி அதன் காரணமாக அத்தாக்ஷி பெறாத கதரை வாங்கி உபயோகிக்கச் செய்வது கதரை ஏமாற்றுவதாகு மல்லவா?”

பதில் :—கதர் கிடைப்பது கஷ்டமாயிருக்கும் காலத்தில் புஸ்தகத்திற்கு அட்டை போட கதர் உபயோகிக்க வேண்டுமென்று வற்புறுத்துவது தவறு. ஏராளமாகக் கதர் கிடைத்த காலத்தில் நான் தான் அதை எல்லாக் காரியங்களுக்கும் உபயோகிக்க வேண்டுமென்று சிபார்சு செய்தவன். 1921-ம் வருஷத்தில் ஆமதாபாத்தில் நடந்த காங்கிரஸ் கொட்டகையும் முகாமும் முழுவதும் கதராலேயே செய்யப்பட்டிருந்தன. அந்த மாதிரி இன்று செய்ய ஆரம்பித்தால் அது பயித்தியக்காரத் தனமாகும். இடம், பொருள், ஏவலுக்குத் தக்கவாறு முறைகளை மாற்றிக் கொள்ள வேண்டும்.

ஆனால் இந்த நிருபர் அத்தாக்ஷி பெறாத கதரைவிட மில் துணி நல்லதென்று கூறும் வாதம் எனக்கு அர்த்தமாகவில்லை. அத்தாக்ஷி பெறாத கதர் என்பது யாது? அத்தாக்ஷி பெறாவிட்டாலும் கையால் நூற்று கையால் நெய்த துணி தானே? அதில் ஏமாற்று இருக்கலாம். ஆனால் சர்க்கா சங்கத்தார் அத்தாக்ஷி பெற்ற கதரில் ஏமாற்றமே கிடையாது என்று

உறுதி கூற முடியாது. ஏமாற்று இல்லாத விஷயம் எதுவும் உலகத்தில் கிடையாது, இப்படி எல்லா யுகங்களிலும் நடந்து வந்திருக்கிறது. அத்தாக்ஷி பெறாத கதர் ஏன் கூடாது என்பது எல்லோருக்கும் தெரியும். அதை உற்பத்தி செய்வதில் நூற்பவர்களுக்கும் நெய்பவர்களுக்கும் கூலிகொடுக்கும் விஷயத்தில் ஒரு நிரந்தரமான திட்டம் கிடையாது. அத்தாக்ஷி பெறாத கதரை விற்கிறவர்கள் இவ்வளவுதான் லாபம் வைத்து விற்கலாம் என்ற திட்டமும் கிடையாது. அநேக இடங்களில் சர்க்கா சங்கத்தாருடைய கடைகளைக் கெடுக்க வேண்டுமென்பதற்காகவே அத்தாக்ஷி பெறாத கதர் கடைகள் ஏற்படுத்துகிறார்கள். ஆயினும் ஏமாற்று இல்லாவிட்டால் கையால் நூற்று கையால் நெய்த துணியை எல்லாம் கதரென்றே சொல்ல வேண்டும். ஒருவர், தானே நூற்று தானே நெய்து கொண்டால் அந்தத் துணியை சட்டப்படி அத்தாட்சி பெற்ற கதராகச் சொல்ல முடியாது. ஆனால் அதுதான் சுத்தத்திலும் சுத்தமான கதராகும். அந்தக் கதரை உற்பத்தி செய்கிறவர், தாம் உற்பத்தி செய்யும் கதரை விட்டு விட்டு மில் துணி உபயோகிப்பது குற்றமாகும்.

விஷயத்தின் சாரம் யாதெனில் எந்த விதத்திலும் மில் துணியை விலக்கிவிட வேண்டுமென்பதேயாகும். கூடுமான வரையில் அத்தாக்ஷி பெறாத கதரை உபயோகியாமல் இருப்பது நல்லது. அத்தாக்ஷி பெற்ற கதர் கிடைக்காத சந்தர்ப்பத்தில் மில் துணியை வாங்காமல் உண்மையான கதராகவுள்ள அத்தாட்சி பெறாத கதரையே வாங்க வேண்டும். ஒருவர் தாமே உற்பத்தி செய்யும் துணியை அத்தாக்ஷி பெறாத கதராகக் குறை கூறலாம். ஆனால் அதுதான் அத்தாக்ஷி பெற்ற கதரைவிட அதிகச் சுத்தமான கதராகும். எல்லோரும் தங்களுக்கு வேண்டிய துணிக்குப் போதுமான அளவு நூல் நூற்பார்களேயானால் சர்க்கா சங்கம் இருக்க வேண்டிய அவசியமேற்படாது. அப்பொழுது விண்ணும் மண்ணும் ஒன்று சேர்ந்து சர்க்கா சங்கத்துக்கு ஜே என்று முழங்கும்.

புது டில்லி — 12-9-46 — மோ. க. காந்தி.

## சத்தியாகிரகம் செய்து அலுத்துப் போனார்களா?

தென்னாப்பிரிக்காவில் இந்தியர்களில் ஒரு கூட்டத்தார் சத்தியாக்கிரகத்தில் நம்பிக்கை இழந்து விட்டதாக டர்பனிலிருந்து செய்திவருகிறது. அவர்கள் நீக்ரோக்களோடும், மற்ற ஆசியாக்காரர்களோடும், மற்ற ஐரோப்பிய அனுதாபிகளோடும் சேர்ந்துபலாத்கார முறைகளைக் கையாண்டால் தான் வெள்ளையர் ஆட்சியை முறியடிக்க முடியுமென்று கனவு காண்பதாகத் தெரிகிறது. இந்த வதந்தி உண்மையானால் கலக்கத்தைத் தருவதாக இருக்கிறது. கண்ணிலிடும் அஞ்சனத்தில் ஈ விழுந்து அது கண்ணில் புகுந்து கரிப்பது போல் இருக்கிறது. தென்னாப்பிரிகாவிலுள்ள இந்தியர்கள் வெகு சிலராக இருந்தபோதிலும் பிறர் செய்யும் துன்பத்தை ஏற்க அளவற்ற ஆற்றல் உடையவராகக் காட்டிக் கொண்டதினாலும்பொறுமையை இழந்து பலாத்காரத்தில் இறங்காமலிருந்ததாலுமே உலகமெங்கும் பாராட்டப்படுகிறார்கள் என்பதை அஹிம்சையில் நம்பிக்கையுடையவர்கள் அஹிம்சையில் நம்பிக்கையற்றவர்கள் எல்லோரும் அறிந்து கொள்ளவேண்டும். தென்னாப்பிரிக்காவிலுள்ள இந்தியர்கள் துன்பத்தை ஏற்றுக் கொள்வதின் மூலமே உண்மையான க்ஷேமத்தை அடைய முடியும் என்பதையும், ஒற்றுமையாயிருந்தால் மட்டுமே உண்மையான வெற்றியை அடைய முடியுமென்பதையும் அறிந்து கொண்டார்கள். நான் என்னுடைய அனுபவத்தின் காரணமாக அவர்களுக்கு வற்புறுத்திக் கூறும் புத்திமதி யாதெனில் இணையற்ற சத்தியாக்கிரக ஆயுதத்தை எந்தக் காரணத்தைக் கொண்டும், யார் சூழ்ச்சி செய்தாலும் எறிந்து விடக் கூடாது என்பதேயாகும். இதைக் கொண்டு அவர்கள் நீக்ரோக்களுடைய உதவியையும் மற்ற அனுதாபிகளுடைய உதவியையும் பெறக் கூடாதென்றோ அவசியப்படும் பொழுது அவர்களுக்கு உதவி செய்யக் கூடாதென்றோ நான் கூறுவதாக அர்த்தப்படுத்திக் கொள்ளக் கூடாது. அவர்கள் உறுதியாகக் கடைப்பிடிக்க வேண்டிய விஷயம் யாதெனில், சத்தியாக்கிரகம் தான், தங்களுடைய ஆயுதம், வேறு ஆயுதம் கிடையாது என்பதேயாகும். அவர்கள் அஹிம்சா மார்க்கத்திலிருந்து பிறழ்வார்களேயானால் அவர்களுடைய நிலைமை மகனைத் தேடப் போய் புருஷனை இழந்த பெண்ணின் கதை போலாகும்.

புது டில்லி — 11.9-46 — மோ. க. காந்தி

## துன்பமில்லாத தேசம்

நம்முடைய தேசம் துக்கமும் துன்பமு மில்லாத தேசமாய் இருக்க வேண்டுமென்று எதிர்பார்க்க நமக்கு உரிமையுண்டு. ஆனால் நம்முடைய மந்திரிகள் முள்முடியைத் தரித்தவுடனேயே அது சித்தித்து விடாது. அத்தகைய தேசம் நம்முடைய இதயத்திலேயே காணப்படும். சில நிபந்தனைகளை நிறைவேற்றினால் ஒவ்வொருவரும் தம்மைத் துக்கமும் துன்பமு மில்லாமல் செய்து கொள்ள முடியும். பலர் இந்தியாவில் அப்படிச் செய்வார்களேயானால் துக்கமில்லாத சமூகம் என்னும் கனவு நனவாகிவிடும். ஆனால் இன்றோ ஜனங்களுடைய மனம் பயத்தாலும் கோபத்தாலும் நிறைந்திருக்கிறது, சகோதரர்கள் பரஸ்பரம் சண்டைபோட்டுக் கொண்டிருக்கிறார்கள். மந்திரிகள் என்ன செய்ய முடியும்? ராணுவத்தையும் போலீசையும் அனுப்புவதா? சூழ்நிலை முழுவதும் மிகவும் கேவலமாயிருக்கிறது. உத்தியோகங்களும் உத்தியோகஸ்தர்களும் ஒன்றுக்கு நூறாகப் பெருகி இருக்கின்றன. எங்கு பார்த்தாலும லஞ்சம் பரவி இருப்பதில் ஆச்சரியமில்லை. நம்மை நாம் உள்ளும் புறமும் சுத்தம் செய்து கொள்ளாவிட்டால் நாம் அதிகாரத்தில் ஏற்றிவைத்த நம்முடைய மந்திரிகளை அரசாங்கத்தை நடத்த முடியாமல் செய்து விடுவோம்.

நாம் தோட்டிச் சகோதரர்களைத் தாழ்த்தி வைத்துக் கொண்டிருக்கும் வரையில் எப்படி நம்முடைய தேசம் துக்கமில்லாத தேசமாக ஆக முடியும்? கிராமங்களில் ஹரிஜனங்களைக் கஷ்டப்படுத்தும் காரியங்களைக் கேட்கவும் படிக்கவும் எனக்கு வருத்தமாயிருக்கிறது. தொத்து நோய் வந்தால் அவர்களை அடிக்கிறார்கள். கிணற்றில் ஜலம் எடுக்கப் போனால் தடுக்கிறார்கள். நாம் கனவு காணும் தேசத்தில் இந்த நிலைமையிருக்கலாமா? கடவுளுடைய சந்நிதானத்தில் இந்த வித்தியாசம் உண்டா? மனித ஜாதி என்னும் குடும்பத்தில் நம்மைப்போலவே அவர்களும் சேர்ந்தவர்கள் அல்லவா?

தோட்டிகளிடத்திலும் லஞ்சம் பரவியிருக்கிறது என்பதைக் கேட்க வருத்தமாயிருக்கிறது. அவர்கள் உத்தியோகஸ்தர்களுக்கு லஞ்சம் கொடுத்து இழிவு படுத்திக்கொள்ளக் கூடாது. அவர்கள் தங்களை யாரிடத்திலும் பிச்சை கேட்கும் ஸ்தானத்தில் வைத்துப் பேசக் கூடாது. நியாயம் வழங்குமாறே கேட்க வேண்டும். அதற்காக அஹிம்சா முறையில் போர் புரியவும் வேண்டும். அவர்களுடைய சொந்த பண்டித ஜவஹர்லால் நேருவும் மற்றவர்களும் மந்திரிகளாயிருப்பதால் நியாயம் வழங்கப்படுமென்பதில் அவர்கள் கொஞ்சமும் பயப்படவேண்டிய அவசியமில்லை.

மோ. க. காந்தி

# தமிழ் ஹரிஜன்

செப்டம்பர் 22 ஞாயிறு 1946

## சர்க்கா ஜயந்தி

சர்க்கா ஜயந்தியின் தேதியும் என் பிறந்த நாள் தேதியும் ஒன்றாக இருந்தபோதிலும் சர்க்கா ஜயந்தி என்பது காந்தி ஜயந்தி யாகாது. இதன் காரணம் எளிதில் தெரிந்து கொள்ளக் கூடியதாகும். பழைய காலத்தில் சர்க்காவுக்கும் பரிபூரண சுதந்திரத்திற்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது. ஏதேனும் சம்பந்தம் உண்டானால் அடிமைத்தனத்துடனேயே சம்பந்தம் இருந்து வந்தது. அந்தக் காலத்தில் ஏழைப் பெண்கள் ஒரு உலர்ந்த ரொட்டித் துண்டுக்காகவே நூற்க வேண்டியவர்களாய் இருந்தார்கள். அந்தக் காலத்தில் இருந்த சர்க்கார் அவர்களிடம் எறியத் திருவுளம் கொண்ட காசுகளையே பொறுக்கி எடுத்து வந்தார்கள். நான் சிறுவனாக இருந்த பொழுது, அப்பொழுதிருந்த ராஜகோட்டு மன்னர் ஒரு குறிப்பிட்ட தினத்தில் ஏழைகளிடம் பணத்தை எறிவதை நான் நேரில் பார்த்திருக்கிறேன். அப்பொழுது அது எனக்கு வேடிக்கையாகவும் விநோதமாகவும் இருந்தது. அதைக் கொண்டு எப்படிப் பழைய காலத்தில் ஏழைகளான நூல் நூற்போர் தங்களிடம் எறியும் காசுகளை ஆவலுடன் பொறுக்கி இருப்பார்கள் என்பதை நான் கற்பனை செய்து பார்த்துக் கொள்ள முடியும்.

நான் 1908 வருஷத்தில் தென் ஆப்பிரிக்காவில் இருந்த பொழுது வறுமையால் வாடி வதங்கும் இந்தியா தேசம் அடிமைத் தளையிலிருந்து விடுதலை பெற வேண்டுமானால் அது கைராட்டினத்தையும் கையால் நூற்ற நூலையும் அடிமைச் சின்னமாகக் கருதாமல் சுதந்திரச் சின்னமாகக் கருதக் கற்றுக் கொள்ள வேண்டுமென்ற தீர்மானத்துக்கு வந்தேன். அத்துடன் கைராட்டினத்தால் ஏழைகளுக்கு கஞ்சிக்குப் போட உப்புக் கிடைக்கும்படியாக செய்யக் கூடியதாகவும் இருக்க வேண்டும் என்றும் எண்ணினேன். இந்த உண்மையை திரு. நாராயண்தாஸ் காந்தியின் மனத்தில் எளிதாகப் பதிய வைத்தேன். அதனால் அவர் சர்க்கா ஜயந்தியின் உண்மையான தத்துவத்தை உணர்ந்து கொண்டார். என்னுடைய பிறந்த நாள், சர்க்கா ஜயந்தியோடு சம்பந்தப்படுவதற்கு முன்னால் கொண்டாடப்படவே இல்லை. அதுவும் நான் தென் ஆப்பிரிக்காவில் இருந்தபோது அங்கே நான் பிராபல்யம் அடைந்திருந்தபோதிலும் யாரும் என்னுடைய பிறந்த நாளைக் கொண்டாட வேண்டுமென்று எண்ணியதில்லை. இந்தியாவில் தான் என்னுடைய பிறந்த நாள் சர்க்கா ஜயந்தியோடு சேர்த்துக் கொண்டாடப்பட ஆரம்பித்தது. இது விஷயத்தில் பிரதானமாய் இருந்தவர் நாராயண்தாஸ் காந்திதான். இப்பொழுது எனக்கு அவர் கொண்டாடிய கொண்டாட்டங்கள் என்னுடைய ஞாபகத்துக்கு வருகின்றன. ஆயினும் எந்த நாளில் சுதந்திரத்துக்கும் அஹிம்சைக்கும் சின்னமாக இருக்கும் கைராட்டினத்தின் இன்னிசை ஒவ்வொரு வீட்டிலும் கேட்கப்படுமோ அந்த நாளில்தான் உண்மையான கொண்டாட்டம் நடைபெறும். இப்பொழுது ஒரு சிலர் தான் நூல் நூற்கிறார்கள். இப்படிச் சிலராக இல்லாமல் ஒரு கோடி ஏழை மக்களாக இருந்தாலும் அவர்களுக்கு இந்தக் கொண்டாட்டத்தால் என்ன பயன்? நாம் தாம் என்ன பிரமாதமாக சாதித்துவிடுகிறோம்? இப்படி வயிற்றுச் சோற்றுக்காக ஏழை மக்கள் நூற்பது கொடுங்கோல் ஆட்சியின் கீழ்க்கூட நடைபெறவே செய்யும். இப்பொழுதும் முதலாளிகள் ஆதிக்கத்தின் கீழ் அப்படித்தான் நடந்து கொண்டிருக்கிறது. கோடிஸ்வரர்கள் ஏழைத் தொழிலாளிகளுக்குக் கொடுக்கும் கூலியைக் கூலி என்று சொல்லக் கூடாது, தருமம் செய்வதாகவே சொல்ல வேண்டும். அதைக் கொண்டுதான் அவர்களுடைய ஆதிக்கம் நடந்து வருகிறது.

சகல மக்களையும் கடவுள் சரிசமானமாகவே கருதுகிறார் என்பதையும் ஒவ்வொருவரும் வேலை செய்தே தம்முடைய ஜீவனத்துக்கு வேண்டிய பொருளைச் சம்பாதித்துக்கொள்ள வேண்டும் என்பதையும் எல்லோருடைய சுதந்திரத்தையும் துப்பாக்கிக் குண்டினால் அல்லாமல் கைராட்டின நூலாகிய குண்டினாலேயே அதாவது இம்சையினால் அல்லாமல் அஹிம்சையினாலேயே பாதுகாக்க வேண்டும் என்பதையும் எப்பொழுது பணக்காரர்களும் ஏழைகளும் ஒருங்கே உணர்ந்து கொள்ளுகிறார்களோ அப்பொழுது நடத்தும் கொண்டாட்டம்தான் உண்மையில் பயனுடையதாகும்.

இன்று உலகத்தில் காணப்படும் சூழ்நிலையை கவனித்தால் நான் கூறுவது கேலிக்கூத்தாகத் தோன்றும். ஆனால் நாம் நம்முடைய இதயத்தினுள்ளே ஆராய்ந்து பார்த்தால் இதுதான் என்றும் அழியாத உண்மை என்பதைக் கண்டு கொள்வோம். தற்சமயம் நாராயணதாஸ் காந்தியும் அவரைப் போன்ற இதர கைராட்டின பக்தர்களும்தான் இந்த உண்மையைத் தங்கள் நம்பிக்கை மூலமாக நிரூபித்துக் காட்ட முயன்றுகொண்டிருக்கிறார்கள். இந்த பக்தர்கள் எந்த உணர்ச்சியோடு சர்க்கா ஜயந்தியைக் கொண்டாடுகிறார்களோ அந்த உணர்ச்சியோடேயே அனைவரும் கொண்டாடவேண்டுமென்று விரும்புகின்றேன்.

புது டில்லி, — 14-9-46 — மோ. க. காந்தி.

## பண்டித நேருவின் அறிக்கை

தற்சமயம் தென்னாப்பிரிக்காவில் நடக்கும் அஹிம்சைப் போராட்டத்தை நிறுத்திவிட்டு பலாத்காரப் போராட்டம் நடத்துவதற்காகச் சிலர் என்னுடைய பெயரைச் சொல்லி ஆதரவு தேடுவதாகவும் அந்த பலாத்காரப் போராட்டத்திற்கு ஆப்பிரிக்கர்களுடைய கூட்டுறவைத் தேடுவதாகவும் டர்பனிலுள்ள நண்பர் ஒருவர் எனக்கு எழுதியிருக்கிறார். இதையறிய எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது. தென் ஆப்பிரிக்காவிலுள்ள இந்தியர்கள் நடத்தும் போராட்டமானது பலாத்கார முறைகளை மேற்கொள்ளுமானால் தோல்வியே அடையும் என்பதில் எனக்குக் கொஞ்சம் கூட சந்தேகம் கிடையாது. அஹிம்சை முறைதான் இந்தியாவில் விரும்பத்தக்கதாயிருக்குமானால் அதுவே தென்னாப்பிரிக்காவிலுள்ள நிலைமையில் அதிக அவசியமானதாகும். தென்னாப்பிரிக்காவிலுள்ள இந்தியர்களை அங்குள்ள ஆப்பிரிக்கர்களோடு ஒத்துழைக்குமாறு நான் அடிக்கடி கூறிவருகிறேன். அப்படியே அவர்கள் செய்வார்களென்று நம்புகிறேன். தென்னாப்பிரிக்காவில் எழுப்பப்பட்டிருக்கும் பிரச்னை வெறும் இந்திய பிரச்னை மட்டுமன்று. அதை விட அதிகமாகும். ஆசிய மக்கள், ஆப்பிரிக்க மக்கள் அனைவரையும் பாதிக்கக் கூடிய பிரச்னையாகும். ஆகையால் பாதிக்கக் கூடியவர்களெல்லோரும் ஒத்துழைக்க வேண்டியது இன்றியமையாததாகும், ஆனால் சாத்வீக முறைகளைக் கையாண்டால் தான் அத்தகைய ஒத்துழைப்பு சாத்தியமாகும், பலனும் தரும். பலாத்காரத்தில் இறங்குவதென்பது முட்டாள்தனமாகும்.

## கர்வமா பைத்தியமா

குஜராத் கர்வமா யிருப்பதை யறிய யார்தான் விரும்ப மாட்டார்கள். அன்பின் காரணமாக அதற்குப் பைத்தியம் பிடித்துவிட்டதாகவும் கூறலாம். நான் இந்தக் கட்டுரையை உங்களுக்கு மிகுந்த துக்கத்துடன் எழுதுகிறேன். என் முன் வந்து நிற்பது கர்வமடைந்த குஜராத் அன்று, பைத்தியம் பிடித்த குஜரத்தே யாகும்.

திரு. பரீக்ஷீத்லால் ஹரிஜனங்களுக்குச் சேவை செய்யும் ஊழியர். அவர் அந்த விதமாக குஜராத்துக்குச் சேவை செய்ய விரும்புகிறார். ஆனால் அங்கு ஜனங்களைப் பிடித்து ஆட்டிவருகிற பைத்தியம் அவரை வேலை செய்ய வொட்டாமல் தடுக்கிறது. உயிருள்ள ஹரிஜனங்களைத்தான் தீண்டாதவர்களென்று எண்ணும் வழக்கம் இருந்து வருகிறதென்று இதுவரை எண்ணி யிருந்தேன். இப்பொழுது பரீக்ஷீத்லால் கூறும் கதையிலிருந்து ஹரிஜனங்கள் இறந்தபிற்பாடும் தீண்டாதவர்களாகவே கருதப்படுகிறார்கள் என்பதை அறிகின்றேன். சுடுகாட்டிலாவது மனிதனுக்கு மனிதன் வித்தியாசம் பாராட்டாமலிருக்க வேண்டுமல்லவா? பிணத்தைச் சாம்பலாக்கிவிட்டால் அப்புறம் அசுத்தம், தீண்டாமை என்பது ஏது? அப்படியிருக்க ஹரிஜனங்களைப் பொதுச் சுடுகாட்டில் சுடக்கூடாதென்று விலக்கலாமா? நவசாரி என்னும் ஊரில் ஒரு ஹரிஜனக்கிழவர் இறந்து போனார். அவ்வூர் மகாஜனங்கள் அவரைப் பொதுச் சுடுகாட்டில் சுடக்கூடாதென்று தடுத்தார்கள். அதன்பின் அதிகமாக எடுத்துச் சொல்லிய பிறகே அவர்கள் சுடுவதற்குச் சம்மத மளித்தார்கள். இந்த விஷயத்தில் மகாஜனங்கள் ஏதோ தயவுகாட்டிவிட்டதாக பெருமை யடைவதற்கும் ஹரிஜனங்கள் வெற்றி யடைந்துவிட்டதாக மகிழ்வதற்கும் இடம் கிடையாது. ஆயினும் சில சமயங்களில் சிறிய அளவில் நன்மை பெற்றாலும் சந்தோஷப்பட வேண்டியதே யாகும். நவசாரி விஷயத்தில் கிளர்ச்சி பலன் பெற்றது நல்லதே யாகும். திரு. பரீக்ஷீத்லால் மற்றொரு கிராமத்தில் நடந்ததையும் கூறுகிறார். அந்தக் கிராமத்தின் பெயரைச் சொல்ல நான் விரும்பவில்லை. அது முற்றிலும் துக்ககரமான விஷயம். அதில் கேவலமான அம்சம் யாதெனில் தொத்துநோய் கால்நடைகளிடையே ஏற்பட்டாலும் கூட அதற்குக் காரணம் இந்த ஏழை ஹரிஜனங்கள்தான் என்று கூறுவதே யாகும். ஜாதி ஹிந்துக்கள் என்று சொல்லிக்கொள்வோர் தொத்து நோய்க்குரிய காரணம் இதுவென்று தெளிவாகத் தெரிந்திருந்தாலும் அதை ஏற்றுக்கொள்வதில்லை. மழைகாலத்தில் புல் செழித்து வளர்கிறது. அதில் எல்லாவிதமான பூச்சிகளும் வந்து சேர்ந்து விடுகின்றன. பட்டினி கிடக்கும் ஆடு, மாடுகள் பசும் புல்லைக் கண்டதும் வெறிகொண்டு ஓடிப்போய் அதையும் அதிலுள்ள பூச்சிகளையும் விழுங்கி விடுகின்றன. இந்த ஆடு, மாடுகள் நோயாகி இறந்து போவதில் என்ன ஆச்சரிய மிருக்கிறது. இப்படித் தொத்துநோயின் காரணம் வெட்ட வெளிச்சமாய்த் தெரிகிறது. ஹரிஜனங்களுடைய ஆடு, மாடுகளும் மற்றவர்களுடைய ஆடு, மாடுகளைப் போலவே நோயாகி இறக்கின்றன. அப்படி இருந்தும் அவர்களையே ஜாதி ஹிந்துக்கள் தொத்து நோய்க்கு ஜவாப்தாரி யாக்குகிறார்கள். அதற்காக அவர்களை ஏசுகிறார்கள், அடிக்கிறார்கள். இதுதான் என் முன்னுலுள்ள கடிதத்தில் கண்ட துக்ககரமான கதையின் சாராம்சமாகும். என்னுடைய மொழிகள் அந்தக் கிராமத்து ஜனங்களுக்குப் போய் எட்ட வேண்டுமே என்று ஆத்திரப்படுகின்றேன்.

இப்பொழுது சீர்திருத்தவாதிகள் அரசாங்கத்தை நடத்த ஆரம்பித்திருக்கிறார்கள். ஆதலால் உத்தியோகஸ்தர்கள் முயற்சி செய்தால் கிராமவாசிகளுடைய பயங்கரமான அறியாமையைப் போக்கிவிட முடியும். ஹரிஜனங்கள் தங்கள் மூடநம்பிக்கையை விட்டுவிட வேண்டும். தங்கள் தூக்கத்திலிருந்து எழுந்துகொள்ள வேண்டும். சர்க்காரும் ஹரிஜனங்களும் தத்தம் கடமையைச் செய்யவேண்டும். இவை நடைபெற்றால் குஜராத்தை இந்தக் கொடிய தீமையிலிருந்து விடுதலை செய்வது சாத்தியமாகும்.

புதுடில்லி, — 13.9.46 — மோ. க. காந்தி.

## எல்லோரும் மந்திரிகளை எதிர்பார்க்கிறார்கள்

மந்திரிகள் பதவியேற்றதும் சில ஆங்கிலேய நண்பர்கள் காந்தியடிகளுக்கு கடிதம் எழுதி யிருந்தார்கள். முன்னிருந்த நிர்வாக சபை மெம்பர்கள் குடியிருந்த வீடுகளிலுள்ள அழகான பூந்தோட்டங்கள் இப்பொழுது பாழடைந்து போகுமென்றும் பட்டுப் போல் பசுமையா யிருந்த இடமெல்லாம் அசுத்தமாகி புஷ்பங்களில்லாமல் அழகற்றுப் போகுமென்றும், நாற்காலிகள் ஜமக்காளங்கள் முதலியவைகள் அழுக்காகி விடுமென்றும், கக்கூசு முதலியவைகள் ஆபாசமாகி விடுமென்றும் எண்ணுவதாக அவர்கள் எழுதி யிருந்தார்கள்.

அதற்குக் காந்தியடிகள் எழுதிய பதிலாவது :—

நான் இங்கிலாந்திலும் தென் ஆப்பிரிக்காவிலும் வசித்து ஆங்கிலேயர்களை நன்றாக அறிந்திருப்பதால் நாகரீகமடைந்த ஆங்கிலேய மக்கள் சுகாதார வழிகளை அறிந்து அனுஷ்டிக்கிறார்கள் என்று கூற முடியும். ஆங்கிலேய உத்தியோகஸ்தர்கள் அரசர்களைப் போல பெரிய மாளிகைகளில் வசித்துக் கொண்டிருக்கிறார்கள். தங்கள் வீட்டையும் தோட்டத்தையும் சுத்தமாக வைத்திருப்பதற்காக ஏராளமான வேலையாட்களை வைத்திருக்கிறார்கள். ஆனால் நம்முடைய தலைவர்கள் ஜனங்களுடைய ஊழியர்களாகவே மந்திரி பதவி ஏற்றிருக்கிறார்கள்.

அதனால் அவர்கள் ஏராளமான வேலையாட்களை வைத்துக் கொள்ள முடியாது. வைத்துக் கொண்டால் அவர்கள் தங்களை ஜனங்களுடைய ஊழியர்கள் என்பது பொய்யாகிவிடும். ஆயினும் அவர்கள் தங்களுடைய வீடுகளை சுய உதவியைக் கொண்டே பரிசுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். அது அவர்களால் செய்ய முடியாத காரியமன்று. அவர்களுடைய பெண்களும் கவனித்துக் கொள்வார்கள். நம்முடைய தலைவர்களில் யாரும் தங்கள் கக்கூசுகளைச் சுத்தம் செய்யத் தயங்க மாட்டார்கள் என்பதை நான் அறிவேன். வைசிராயின் மாளிகை பரிசுத்தமாக இருந்தாலும் அவருடைய ஹரிஜன வேலையாட்களுடைய வீடுகள் அசுத்தமாகவே இருப்பதாக ஒரு டாக்டர் அம்மாள் பல வருஷங்களுக்கு முன் என்னிடம் சொன்னாள். நம்முடைய தலைவர்கள் அந்தமாதிரி வித்தியாசத்தைச் சகிக்க மாட்டார்கள். ஜவஹர்லாலுடைய பரிவாரத்திலொருவர் ஹரிஜன். அவர் இப்பொழுது சட்ட சபை மெம்பராகி இருக்கிறார்.

நம்முடைய தலைவர்கள் தங்கள் வேலையாட்களை தம்முடைய குடும்பத்தை சேர்ந்தவர்களைப் போலவே நடத்துகிறார்கள். நம்முடைய மந்திரிகள் வாழ்க்கையில் சகல துறைகளிலும் உயர்ந்த முறையில் நடக்காவிட்டால் எனக்கு வருத்தமாயிருக்கும். ஆனால் அவர்கள் என்னை ஏமாற்றமடையச் செய்ய மாட்டார்களென்றே நம்புகிறேன்.

## முட்டாள்தனமாகப் பணத்தை வீணாக்கவேண்டாம்

தினந்தோறும் பண்டித ஜவகர்லால் நேரு ஐநூறு முதல் எண்ணூறு தந்திகள் வரை பார்க்க வேண்டி

யிருக்கிறதென்றும் அதே தொகை வைசிராய்க்கு வந்து சேர்கிறதென்றும் புதிய மந்திரிகளில் ஒருவர் காந்தியடிகளிடம் கூறிக்கொண்டிருந்தார். அதைக் குறித்து காந்தியடிகள் அன்று மாலைப் பிரார்த்தனைக் கூட்டத்தில் கீழ்க்கண்டவாறு கூறினர் :—

“வைசிராய் சகல வல்லமையுள்ளவராகவும் இஷ்டம் போல் எதையும் செய்யக் கூடியவராகவும் இருந்த காலமொன்று இருக்கத்தான் செய்தது. ஆனல் இன்று அவர் தாமாகவே தமது அதிகாரங்களைத் தமது மந்திரி சபைக்கு அளித்து விட்டார். அதனல் அவர் இப்பொழுது இங்கிலாந்திலுள்ள அரசரைப் போல ஜனங்களுக்குக் கட்டுப்பட்ட தலைவராகவே இருந்து வருகிருர். இங்கிலாந்திலுள்ள அரசர் மந்திரிகள் சம்மதமில்லாமல் எதையும் செய்ய முடியாது.

இங்கிலாந்திலிருந்த அரசர் ஒருவர் ஜனங்களுடைய விருப்பத்திற்கு விரோதமாக நடந்ததின் காரணமாக ஜனங்கள் அவர் தலையை வெட்டி விடவும் செய்தார்கள். அவசியம் ஏற்பட்டால் உபயோகிப்பதற்கு இணையற்ற சத்தியாக்கிரக ஆயுதம் கையிலிருப்பதால் நமது மந்திரிகள் அப்படித் தலைவெட்டும் காரியம் எதுவும் செய்ய மாட்டார்கள். இப்படி ஏராளமாகத் தந்திகள் அனுப்பியவர்கள் மந்திரிகளுக்கும் தந்தியாபீசுகளுக்கும் கஷ்டம் கொடுப்பதோடு ஜனங்களுடைய பணத்தை வீணுக்கவும் செய்கிருர்கள் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். எங்கள் பணந்தானே என்று பணக்காரர்கள் எண்ணிக் கொள்கிருர்கள். அது தவறு. அந்தப் பணம் பட்டினி கிடந்து வாடும் ஏழைகளிடமிருந்து அவர்கள் கொள்ளையடித்த பணமாகும்.

## ஜின்னுவின் பலாத்காரம்

ஜின்ன சாஹிபும் அவருடைய தோழர்களும் தங்கள் விருப்பத்தைப் பலாத்காரம் மூலமாக நிறைவேற்றிக் கொள்ளப் போவதாகச் சொல்லிக் கொண்டே இருக்கிருர்கள். இது அரசியல் கப்பலை எங்கு கொண்டு சேர்க்குமென்று தெரியவில்லை. காங்கிரஸ்காரர்களிடம் அதிகாரம் வந்து சேரலாம். ஆனல் அவர்களுடைய கடமைகளும் பொறுப்புக்களும் நூறு மடக்கு அதிகமாகும். காங்கிரஸ்காரர்கள் சர்க்காரை எதிர்த்தபொழுது அவர்களைக் கைதி செய்தார்கள், அடித்தார்கள், கொல்லக் கூடச் செய்தார்கள். காங்கிரஸ் பலாத்காரத்தைக் கைக் கொண்டிருந்தால் தோல்வியடைந்திருக்கும். பழிக்குப் பழி வாங்காமல் துன்பத்தை ஏற்றுக் கொள்வதுதான் பலன் தரும் மார்க்கம். கிராம வாசிகள் மனதில் ஹிம்சையில்லை. பட்டண வாசிகள் மனதில் தான் இருக்கிறது. நான் காங்கிரஸில் சேர்வதற்கு முன்னதாகவே ஹிந்து முஸ்லிம் ஒற்றுமையில் அக்கறையுடையவனுயிருந்தேன். நான் பள்ளிக்கூடத்தில் படிக்கும் பொழுது எனக்குப் பல முஸ்லிம் நண்பர்கள் இருந்தார்கள். நான் என்னுடைய சகோதரருடைய முஸ்லிம் நண்பர்களின் ஒரு வழக்கு சம்பந்தமாகவே தென் ஆப்பிரிக்கா சென்றேன். அங்கே நான் முஸ்லிம்கள் மூலமாகவே ஹிந்துக்களுக்கும் சேவை செய்தேன். அந்தக் காலத்தில் அங்கே ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஒன்று சேர்ந்தே உழைத்தார்கள். அதனல் தான் இன்று ஜின்ன சாஹிபும் அவர்களுடைய தோழர்களும் ஹிந்துக்களை பகைவர்களாக எண்ணுவதைக் கேட்க வருத்தமாயிருக்கிறது. நான் முஸ்லிம் இல்லையாயினும் இஸ்லாம் மதம் பகையைப் போதிக்கவில்லை என்று நான் உறுதியாய்ச் சொல்வேன். எந்த மதமும் பிற மதத்தாரைக் கொல்லும்படி சொல்லவில்லை. ஆனல் இப்பொழுது நடப்பது அதுதான். முஸ்லீம் லீக் தலைவர்கள் தங்கள் கோரிக்கைகளுக்கு இணங்குமாறு காங்கிரஸையும், ஹிந்துக்களையும் பிரிட்டிஷாரையும் நிர்பந்திக்கப் போவதாக கூறுகிருர்கள். இது தவருன வழி என்பதில் சந்தேகமில்லை. ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஒருவரோடொருவர் பகைவர்களாக எண்ணிக் கொள்வது முட்டாள் தனமாகும். ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஒரே பூமியில் பிறந்து ஒரே உணவை உண்டு ஒரே ஜலத்தைக் குடித்து ஒரே பாஷையை பேசும் சகோதரர்களாவர். அவர்கள் ஒன்று சேர்ந்து வாழ வேண்டியவர்களாவார்கள். சிறுபான்மையோர்களுக்கெல்லாம் பாகிஸ்தானில் பாதுகாவல் உண்டென்று ஜின்ன சாஹிப் கூறுகிருர். இப்பொழுது வங்காளத்திலும் பஞ்சாபிலும் ஸிந்துவிலும் முஸ்லிம் ராஜ்யம் தானே நடக்கிறது? அங்கு நடக்கும் காரியங்களைப் பார்த்தால் எதிர் காலத்தில் எல்லாம் நன்ருக நடக்குமென்று தோன்றவில்லை. இஸ்லாம் மதத்தை வாளைக் கொண்டே காப்பாற்றிவிட முடியுமென்று முஸ்லிம் லீக் கனவு காண்கின்றதா? அப்படியானல் அது தவருகும். இஸ்லாம் என்னும் பதத்திற்கே சமாதானம் என்பதுதான் பொருள். அதனல் எந்த மதமும் சமாதானத்தை விட்டுப் பிறழ்ந்தால் வாழவே முடியாது.

புது டில்லி, மோ. க. காந்தி.

## நிறுத்துக

ஆங்கில ஹரிஜன் பத்திரிகையில் பிரசுரிக்கப்படுவது போன்ற மூன்று பாஷை அகராதி கடையில் விற்கப்படுவதால் ஹரிஜன் பத்திரிகையில் பிரசுரிக்க வேண்டிய அவசியமென்ன என்று ஒரு ஹிந்திப் பத்திரிகா நிருபர் கேட்கிருர். அத்தகைய அகராதி ஒன்று இருக்குமானல் ஹரிஜனில் பிரசுரிக்க வேண்டியதில்லை தான். அந்த விஷயம் என் சக ஊழியர்களுக்குத் தெரியாமல் போனதை அறிய ஆச்சரியமாயிருக்கிறது. அந்த அகராதியைப் பெற முயன்றுகொண்டிருக்கிறேன்.

மற்ருரு நண்பர் அதே அகராதியைப் பற்றி எழுதியிருப்பதோடு என்னுடைய ஹிந்துஸ்தானி உண்மையிலே உருதுவாக இருப்பதாகவும் அதனல் நான் நாளுக்கு நாள் அதிகமாக ஹிந்தி பக்தர்களுடைய வெறுப்புக்கு ஆளாகி வருவதாகவும் ஆங்கிலத்தில் கடிதம் எழுதியிருக்கிருர். உருது பக்தர்களும் இதேமாதிரி குறை கூறுகிருர்கள். நான் என்னுடைய மொழியை ஹிந்துஸ்தானி என்று கூறிக்கொண்டு உருதுப் பதங்களை நீக்கிவிட்டு ஸமஸ்கிருத ஹிந்திப் பதங்களை சேர்த்துக் கொள்ளும் வேலையைத் தவிர வேருென்றும் செய்யவில்லை என்று சொல்லுகிருர்கள். இப்படி இரண்டு கக்ஷியாரும் குறைகூறுவதை நான் வரவேற்கிறேன்.

என்னுடைய ஹிந்துஸ்தானி உருதுவுமன்று. ஹிந்தியுமன்று. இரண்டையும் சரியான அளவில் சேர்த்து சிருஷ்டிக்கப்படும் ஒரு பாஷையாகும். ஹிந்தி ஜலமும் உருது ஜலமும் ஒன்று சேர்ந்து ஓடும் நதி ஒரு காலத்தில் ஓடிக்கொண்டிருந்ததாகவும் இப்பொழுது மறைந்துவிட்டதாகவும் பண்டிதர்கள் கூறுகிருர்கள். அந்த இரண்டு பாஷைகளின பதங்களும் வேறு வேறு இடங்களிலிருந்து வந்தவைகளாக இருந்தபோதிலும் அவைகளுடைய இலக்கணம் மட்டும் ஒன்ருகவே இருந்து வருகிறது. அதனல் அவைகள் பிரிந்து நிற்காமல் ஒன்ருகச் சேர்ந்து ஒரே நதியாக ஆகவேண்டுமென்பதே ஹிந்துஸ்தானி பாஷாப் பிரசாரத்தின் நோக்கமாகும். இந்த முயற்சியின் வெற்றி ஹிந்துஸ்தானி பிரசாரகர்களின் சேவையைப் பொருத்ததாகவே இருக்கின்றது. நோக்கம் சரியானதாக இருந்தால் முயற்சி வீண் போகாது. வெற்றி தோல்வி எப்பொழுதும் கடவுள் கையிலேயேயிருக்கின்றது. அவர்தான் ஆக்குபவரும் அழிப்பவரும் என்பதை உணர்ந்துகொண்டால் ஏன் கவலைப்படவேண்டும் ?

ஜனங்கள் புகழவேண்டுமென்பதற்காக இந்த வேலையை ஆரம்பிக்கவில்லை, உண்மையான சேவை

செய்ய விரும்புகிறவர்கள் புகழை விரும்புவதுமில்லை, குறை கூறுவதைக் கண்டு அஞ்சுவதுமில்லை. புகழ்வதைக் கேட்டுப் பூரிப்பவர்களும் குறை கூறுவதைக் கேட்டு வாடுபவர்களும் உண்மையான ஊழியம் செய்பவர்களாகமாட்டார்கள். உண்மையான ஊழியன் ஊழியத்தில் மட்டும் கண்ணாயிருப்பதையே ஊழியத்துக்குள்ள பரிசாக எண்ணிக் கொள்வான். ஆதலால் இந்த இரண்டு நதிகளையும் ஒன்றாகச் சேர்த்து இந்த பெரிய நாட்டுக்கு நலந் தேடும் இந்த நல்ல வேலையைச் செய்வதில் பிழை கண்டு பிடிப்பதை விட்டுவிட்டு உதவிசெய்யும்படியாக எல்லோரையும் கேட்டுக்கொள்கிறேன். கடவுளை ஈஸ்வரன் என்று கூறுவதோடு குதா என்றும் அல்லா என்றும் கூறுவதைக் கொண்டும் அதே சமயத்தில் கடவுளைப்பற்றிய அறிவைப் பெருக்குவதைக்கொண்டும் கடவுள் கோபித்துக்கொள்ளமாட்டார் என்று நம்புகிறேன்.

மோ. க. காந்தி.

## சொர்க்கத்தை இழந்தோம்

வால்மீகி மந்திரத்திலுள்ள என்னுடைய சிறிய அறையில் பின்பக்கமாக ஒரு ஜன்னல் இருக்கிறது. அதன் வழியாகப் பார்த்தால் திறந்த மைதானம் ஒன்று வெகு தூரம் தெரியும். சிவந்த பாறைகளும் உயரமாக வளர்ந்துள்ள புல்லும் அங்கே நிறைந்திருக்கின்றன. தூரத்தில் நீலவானம் தெரிகிறது. எனக்கு இதைப் பார்த்துக் கொண்டிருக்க எப்பொழுதும் ஆவலாக இருக்கிறது. காந்தியடிகளுக்குப் பால் தரும் வெள்ளாடுகள் அந்த ஜன்னலருகே வந்து நிற்கும். அவைகளைப் பார்ப்பதும் எனக்கு ஆறுதலாயிருக்கும்.

நான் சிறு குழந்தையாயிருந்தபொழுது என் பாட்டனாருக்குக் கிராமத்திலிருந்த வீட்டில் வசித்துக் கொண்டிருந்தேன். அங்கிருந்து ஒரு சாலை வழியாகப் பட்டணத்திற்குச் செல்லலாம். மற்றொரு சாலை வழியாக கிராமத்துக்குச் செல்லலாம். இன்னொரு சாலை வழியாக தூரத்திலிருந்த மலைகளுக்குச் செல்லலாம். அங்கே பக்ஷிகள் பாடும். காட்டுப் புஷ்பங்கள் ஏராளமாக மலர்ந்து கிடக்கும். என்னுடைய செவிலித்தாய் எந்தச் சாலை வழியாகப் போவோம் என்று கேட்பாள். நான் எப்பொழுதும் மலைகளுக்குச் செல்லும் வழியாகச் செல்ல வேண்டுமென்றே பதில் கூறுவேன். அதுதான் அழகும் ஆனந்தமும் நிறைந்த இடம் என்பது எனது அபிப்பிராயம். ஐம்பது வருஷங்களுக்குப் பின் டில்லியில் நான் அந்தவிதமான சாலையைக் காணாவிட்டாலும் அதே மாதிரியான மலைக் காக்ஷியைக் கண்டு சந்தோஷமடைந்தேன்.

நான் டில்லியை விட்டுப் புறப்படுவதற்கு முன்னால் சாந்தினி சௌக் என்னும் கடை வீதிக்குப் போக வேண்டியிருந்தது. அங்கே போனபொழுது ஐம்புலன்களும் துன்பமடைந்தன. கூச்சலும், இரைச்சலும் கர்ண கடூரமாயிருந்தன. அசுத்தமும் ஆடம்பரமும் கண்களைத் துன்புறுத்தின. துர்நாற்றம் பொறுக்க முடியாததாயிருந்தது. ஜனங்களுடைய முகத்தைப் பார்ப்பது எல்லாவற்றிலும் கஷ்டமாயிருந்தது. அவர்களுடைய மனம் கல்லாக இறுகி விட்டதைப் பிரதிபலித்துக் கொண்டிருந்தன.

ஆனால் இதைத்தான் ஜனங்கள் நாகரீகமென்று கூறுகிறார்கள். இதை வேண்டாமென்று ஆக்ஷேபித்தால் முன்னேற்றத்தை ஆக்ஷேபிப்பதாகக் கூறுகிறார்கள். சாந்தினி சௌக்கை அவர்கள் ஆபாஸமான இடமெனக் கருதாமல் பிரமாதமான வியாபார ஸ்தலமாகக் கருதுகிறார்கள்.

அன்று மாலை நான் டேராடூனுக்கு ரயில் ஏறினேன். அதிகாலையில் வண்டியிலுள்ள ஜன்னல் வழியாகப் பார்த்தபொழுது, சுவர்க்கத்தைக் காண்பது போலிருந்தது. காற்று சுத்தமாகவும் சுகமாகவும் இருந்தது. காடுகள் பசுமையாயிருந்தன. ஓடையில் பளிங்கு போல் தெளிவான ஜலம் பளபள வென்று மின்னிக்கொண்டும் துள்ளிக் கொண்டும் ஓடிக் கொண்டிருந்தது. அதன் கரைகளில் புஷ்பம் நிறைந்த புதர்களும் நீண்டு வளர்ந்த புற்களும் காணப்பட்டன. சூரியன் உதய கிரியில் உதித்தான். பொன்மயமான அவனுடைய கிரணங்கள் தூரத்தில் கங்காதேவி ஹரித்துவாரத்தை நோக்கித் தன்னுடைய புண்ணிய யாத்திரையைச் செய்து கொண்டிருப்பதைக் காட்டின. பக்ஷிகள் கடவுளுக்கு வந்தனத் தோத்திரங்கள் பாடியது போலவே என்னுடைய ஹிருதயமும் பாடியது.

அப்பொழுது சாந்தினி சௌக்கிலுள்ள நகரமக்கள் அசிங்கக் காக்ஷிகள் சூழ வாழ்ந்து கொண்டிருப்பது என் நினைவிற்கு வந்தது. இந்தக் காக்ஷியை விட்டு அந்த காக்ஷியைக் கட்டியழும் நிலைமைக்கு வந்து விட்டார்களே, இயற்கையில் இறைவனைக் காணும் சக்தியை அவர்களுடைய கண்கள் இழந்து விட்டனவே, மௌனத்தின் குரலைக் கேட்கா விட்டாலும் பக்ஷிகளின் இசையை கேட்க முடியாதபடி அவர்களுடைய காதுகள் கெட்டுப் போய்விட்டனவே, சுத்தமான இனிய மலைக் காற்றை விரும்பாமல் நகரத்தின் நாற்றங்களை விரும்பக் கூடிய நிலைக்கு அவர்களுடைய மூக்கு வந்து விட்டனவே என்று எண்ணினேன். நான் இருந்த வண்டியில் கல்வி கற்ற வாலிபர் இருவர் இருந்தார்கள். ஒருவர் புஸ்தகம் படிப்பதில் ஆழ்ந்திருந்தார். ஒருவர் ஒரு மூலையில்உட்கார்ந்து கொண்டு ஸிகரட் குடித்துக் கொண்டிருந்தார். இவர்கள் முஸோரிக்குச் சென்றதும் சினிமாவுக்குப் போய் திரையில் காட்டப்படும் அந்நியநாட்டுக் காட்சிகளைக் கண்டும் ஆபாசமான சங்கீதத்தைக் கேட்டும் ஆனந்த பரவசமடைவார்கள் என்று எனக்குள் எண்ணிக் கொண்டேன். அவர்கள் கேதார்நாத் மலையை பயபக்தியுடன் திரும்பிப் பார்க்கவில்லை. மணமிகுந்த காற்றின் ஒலிக்குச் செவி கொடுக்கவுமில்லை.

ஐயோ! நாகரீக மனிதன் எவ்வளவு கெட்டுப் போய் விட்டான்! அவன் கொடிய நோய்க்கு இரையாகி இருக்கிறான். ஆனால் அதை நோயென்று எண்ணாமல் முன்னேற்றம், அறிவு, நாகரீகம் என்று பெருமை பேசிக்கொள்கிறான். என்னே அவனுடைய அறிவீனம்!

மீராபென்

## கிராமச் சர்வகலா சாலைகள்,

பெங்களூரிலிருந்து டாக்டர் கே.என். கினி என்பவர் கீழ்க்கண்ட திட்டத்தை யனுப்பியிருக்கிறார் :—

"கல்வி கற்றவர்கள் கிராமங்களில் வசிக்கப் பிரியப்படுவதில்லை என்றும் கிராமத்து ஜனங்கள், கல்வி கற்றவுடன் நகர வாழ்க்கையை விரும்புகிறார்கள் என்றும் நாம் அடிக்கடி வருந்துகிறோம். நாம் இப்படி நகர வாழ்க்கையை விரும்புவதற்கு முக்கியமான காரணம் இப்பொழுது தரப்படும் சர்வகலா சாலைப் படிப்பு கிராம வாழ்க்கைக்குத் தகுதி உடையவர்களாக்காமல் பட்டணக்களில் வேலை பார்ப்பதற்குத் தகுந்தவர்களாக ஆக்குவது தான். கல்விப் பட்டம் பெற்றவர்கள் நகரங்களுக்குச் செல்வதைக் கண்டு அறை குறையாகப் படித்தவர்கள் கூட அங்கு செல்ல ஆரம்பித்து விடுகிறார்கள். கிராமங்களில் சந்தோஷமாய் வாழுவதைவிட நகரங்களில் பட்டினி கிடப்பது சிலாக்கியமென கருதுகிறார்கள். கல்விப்பட்டம் பெற்றவர்கள் கிராம வாழ்க்கையை விரும்ப வேண்டுமானால் சர்வ கலாசாலைப் படிப்பை கிராம மயமாக்கவேண்டும். ஆனால் இப்பொழுதுள்ள சர்வ கலாசாலைகள் பழைய சம்பிரதாயங்களை

விட்டு விட்டு இந்தப் புதிய முறையைக் கையாளுவது முடியாதகாரியம். ஆனால் சர்க்காரும் தர்மிஷ்டர்களும் புதிய சர்வ கலாசாலைகள் அமைத்து கிராம வாழ்க்கைக்கு ஒட்டிய விஷயங்களைக் கற்பிக்கவும் ஆராய்ச்சி நடத்தவும் ஏற்பாடு செய்யலாம். சமீப காலம்வரை வாழ்க்கைக்கு வேண்டிய அநேக பொருள்களை நாம் அயல் நாடுகளிலிருந்தே தருவித்துக் கொண்டிருந்தோம். இப்பொழுது சில வருஷங்களாக உயிர்வாழ்க்கைக்கு இன்றியமையாத உணவுப்பொருள்களைக் கூட அயல் நாடுகளிலிருந்து தருவித்துக் கொண்டிருக்கிறோம். காமதேனு வளர்ந்த நாட்டில் இப்பொழுது அயல் நாட்டிலிருந்து பால் பவுடர் தருவித்துக்கொண் டிருக்கிறோம். நாம் கிராமக் கைத்தொழில்களை ஆராய்ந்து அபிவிருத்தி செய்யக்கூடிய விதத்தில் கிராமங்களில் சர்வகலாசாலைகளை அமைத்து விடுவோமானால் நம்முடைய வாழ்வில் ஒரு பெரிய புரட்சியைப் பத்து வருஷ காலத்திற்குள்ளாக உண்டாக்கிவிட முடியும். இந்தக் காரியங்களுக்குத்தான் இனிமேல் சர்க்கார் ஏராளமான பணத்தைச் செலவு செய்ய வேண்டும். நம்முடைய வள்ளல்களும், கோவில்களும, மடங்களும் தங்களிடமுள்ள பணத்தை இந்தக் காரியத்திற்குச் செலவிட வேண்டும். இப்படிச் செய்ய கோவில்கள் மறுத்தால் சட்டத்தின்மூலம் கட்டாயப்படுத்த வேண்டும். கிராமங்களில் ஏற்படுத்தும் சர்வகலாசாலைகள் மனப் பண்பாட்டிற்கு வேண்டிய கல்வியை அளிப்பதோடு கிராமக் கைத்தொழிலுக்கு வேண்டிய கல்வியையும் அளிக்க வேண்டும்.

கிராமத்தில் ஏற்படுத்தும் ஹைஸ்கூலில் படித்து முடித்த பின் மாணவர்கள் கிராமங்களில் ஏற்படுத்தும் கல்லூரிகளில் இரண்டு வருஷ காலம் படித்து ஸயன்ஸ் மாணவர் என்ற பட்டமோ அல்லது கலை மாணவர் என்ற பட்டமோ பெற வேண்டும். அவர்களுக்குக் கல்வி பிரதேச பாஷை மூலமாகவே அளிக்கவேண்டும். பிரதேச பாஷையும் இங்கிலீஷ் பாஷையும் கட்டாயமாய்ச் சொல்லிக் கொடுக்கப்பட வேண்டும். சயன்ஸ் மாணவர் பட்டத்திற்குப் படிக்க விரும்புகிறவர்கள் கீழ்க்கண்ட தொகுதியிலுள்ள பதினாலு விஷயங்களில் தங்களுக்கு இஷ்டமான மூன்று விஷயங்களைப் படிக்க வேண்டும். படிக்கும் நேரத்தில் மூன்றில் இரண்டு பகுதியை இந்தப் பாடங்களுக்குச் செலவழிக்க வேண்டும்.

ஸயன்ஸ் மாணவர் விஷயத் தொகுதி :—

(1) விவசாயம்
(2) தோட்டப் பயிர்
(3) பட்டுப் பூச்சி வளர்த்தல்
(4) பால் பண்ணை
(5) ஆடு வளர்த்தல்
(6) தேனீ வளர்த்தல்
(7) மீன் வளர்த்தல்
(8) துணி உற்பத்தி
(9) கிராமச் சுகாதாரம்
(10) கிராமப் பொருளாதாரம்
(11) கிராம மின்சாரத் தொழில்
(12) கிராமக் கட்டிடத் தொழில்
(13) கிராமச் சிற்பம்
(14) கிராம கடுதாசி முதலிய தொழில்கள்

கலை மாணவர் பட்டத்திற்குப் படிப்பவர்கள் கீழ்க்கண்ட ஏழு விஷயங்களில் ஏதேனும் மூன்றைப் படிக்க வேண்டும்.

(1) கிராமச் சமூக சாஸ்திரம்
(2) கிராமப் பொருளாதாரம்
(3) கிராம நிர்மாணம்
(4) கிராமக் கல்வி
(5) கிராம புள்ளி விவரங்கள்
(6) விற்பனை
(7) பாங்கித் தொழில்

கைத்தொழிலுக்கு வேண்டிய மிஷின்களைச் செய்வதற்கும் கற்றுக் கொடுக்க வேண்டும். அவைகளை அங்கங்கே செய்துகொள்ள வேண்டும். ஹிந்துஸ்தானியும் கற்றுக் கொடுக்கவேண்டும். ஆனால் அதில் பரீக்ஷை செய்யவேண்டிய அவசிய மில்லை. இந்த மாணவர்கள் இரண்டு வருஷம் படித்து ஸயன்ஸ் நிபுணர் பட்டமோ கலை நிபுணர் பட்டமோ பெறுவதற்கு வேண்டிய கலாசாலைகளும் ஏற்படுத்த வேண்டும்.

அதற்கு மேற்பட்ட பட்டம்பெற விரும்புகிறவர்கள் கிராம முன்னேற்றத்திற்கு வேண்டிய ஏதேனும் ஒரு விஷயத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்து பிரதேச பாஷையில் புஸ்தகம் எழுதவேண்டும். தேசத்திற்கு உபயோகமில்லாத எந்தக் கல்வியும் பிரயோஜன மில்லை.

கிராம சர்வ கலாசாலைகளின் நோக்கம், கைத்தொழில் செய்து காலக்ஷேபம் செய்யும்படியான சக்தியை உண்டாக்குவதே யாகும். தேச நிர்மாண வேலைகளுக்கு நிபுணர்கள் அவசியப்பட்டால் கிராம சர்வகலாசாலைப் பட்டதாரிகளையே நியமிக்க வேண்டும். அவர்கள்தான் நாட்டிலுள்ள மக்களுக்கு சேவை செய்வதற்குரிய தகுதியுடையவர்கள் ஆவார்கள்.

பத்து லக்ஷம் ஜனங்களில் 23 ஆயிரம்பேர் சர்வ கலாசாலைப்படிக்கு தக்க அறிவுடையவர்களா யிருப்பார்கள் என்று கணக்கிடப் பட்டிருக்கிறது. ஹைஸ்கூல் படிப்புக்கு மட்டும் தகுதியுடையவர்கள் 27 ஆயிரம்பேர் என்று வைத்துக்கொண்டால் உயர்ந்த படிப்புக் குரியவர்கள் 50 ஆயிரம் பேருக்குக் குறைவில்லை என்று கணக்கிடலாம். இவர்களில் ஐயாயிரம் பேராவது பட்டதாரிகள் ஆகமுடியும். ஆதலால் பத்து லக்ஷம் ஜனங்களுக்கு ஒரு சர்வ கலாசாலை ஏற்படுத்துவது கஷ்டமான காரியமன்று. அமெரிக்காவில் இதைவிடக் குறைந்த தொகையினருக்கு ஒரு சர்வ கலாசாலையாக ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. அதனால்தான் அந்த தேசம் அதிகச் செல்வ முடையதாக இருக்கிறது.

கிராம சர்வ கலாசாலையில் எந்த வயதிலுள்ளவர்களையும் சேர்த்துக் கொள்ளவேண்டும். ஒவ்வொரு விஷயமாகப் படித்து தேறுவதற்கு இடந்தரவும் வேண்டும். தினசரி வேலைக்கு முன்போ, பின்போ வந்து படிக்கவும் வசதி செய்து கொடுக்கவேண்டும். மாணவர்களிடம் சம்பளம் கேட்கக்கூடாது. இத்தகைய சர்வ கலாசாலைகளை ஸ்தாபித்தால் நம்முடைய கிராம வாழ்க்கை பண்பாட்டு விஷயத்தில் வளமுடையதாகவும், செல்வ விஷயத்தில் செழிப்புடையதாகவும் இருக்கும்."

டாக்டர் கினி கூறுவதில் மிகுந்த உண்மை யிருக்கிறது. அவர் டாக்டர் ஜாக்கீர் உசேனோடும் அரியநாயகம் தம்பதிகளோடும் தொடர்பு வைத்துக்கொண்டு, நடத்திவைக்கக் கூடிய ஒரு திட்டத்தை வகுக்கவேண்டு மென்று யோசனை கூறுகிறேன். இப்பொழுதுள்ள சர்வ கலாசாலைகளைக் கிராமவாசிகளுக்கு வேண்டிய முறையில் எளிதில் மாற்றி அமைத்து விடலாமென்று எண்ணுகிறேன்.

மோ. க. காந்தி

அச்சடித்தவர் பி. அருணசலம், கமர்ஷியல் பிரின்டிங் அன் பப்ளிஷிங் ஹவுஸ், 46, அரண்மனைக்காரத் தெரு, ஜி. டி., சென்னை.
பிரசுரித்தவர் : சின்ன அண்ணாமலை, தமிழ்ப்பண்ணை, 6/2 நாகேஸ்வரராவ் ரோடு தியாகராயநகர், சென்னை 17.
ஆசிரியர்கள் : பொ. திருகூட சுந்தரம்; நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை